விளைதிறன் கொண்ட பாடசாலையின் இயல்புகள்.
Characteristics of the Effective School.

(க.ஞானரெத்தினம், சிரேஷ்ட விரிவுரையாளர், கல்விப்பீடம், திறந்த பல்கலைக்கழகம்.)

அறிமுகம் :

கற்றல் என்பது வாழ்க்கை நீடித்த செயற்பாடாகும். இது தொடர்ந்த மீளமைப்புச் செய்தலையும் அனுபவங்களைப் புதுப்பித்தலையும் உள்ளடக்குகின்றது. கற்றல் என்பது விதிமுறையாகவும் விதிமுறையில்லாமலும் நாடெங்கும் எல்லா இடங்களிலும் எல்லா மக்களாலும் எல்லா காலங்களிலும் வயது வேறுபாடின்றி மேற்கொள்ளப்பட்டு வருகின்ற ஒரு செயன்முறையாகும்.

கற்றல் செயன்முறையானது மிகவும் விதிமுறையாகவும் அமைப்பொழுங்குடனும் தொடர் ஒழுங்குடனும் பாடசாலையில் நடைபெறுகின்றது. ஒழுங்குபடுத்தப்பட்ட நடவடிக்கைகள் பாடசாலையில் இருப்பதால் பாடசாலையை ஒரு நிறுவனம் என்று கூறலாம். ஏனைய நிறுவனங்கள் போலல்லாது பாடசாலை ஓர் சிக்கல் சார்ந்த நிறுவனமாகும். இங்கு 5வயதில் இருந்து 18 வயது வரையான மாணவர்கள் இருப்பார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் தனியாள்கள் என்பதால் இவர்களின் விருப்பு, வெறுப்பு, தேவை, கவர்ச்சி என்பனவெல்லாம் வேறுபட்டிருப்பதே இந்த சிக்கல் நிலமைக்கு காரணமாகும் எனலாம். பாடசாலையில் பாடவிதான செயற்பாடு, இணைப்பாடவிதான செயற்பாடு,விழுமியம் சார்ந்த செயற்பாடு, சமூகமயமாதல் சார்ந்த செயற்பாடு என பல்வேறு விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இச் செயற்பாடுகளில் தனியாள் வேறுபாடுகளை கவனத்தில் எடுக்கவேண்டிய தேவையும் உள்ளது.

"பாடசாலை" என்பது சமூகத்தில் இருந்து தோன்றிய "ஒரு சிறு சமூகம்"ஆகும். பாடசாலைக்குத் தேவையான ஆசிரியர்களையும் மாணவர்களையும் சமூகமே அளிக்கின்றது. இதனால் சமூகம் எதிர்பார்க்கும் சட்டதிட்டங்கள், விழுமியங்கள் யாவற்றையும் பாடசாலை கவனத்தில் எடுத்து சமூகத்தின் எதிர்பார்ப்பிற்கு அமைய மாணவர்களை சமூகமயப்படுத்தி மீளவும் அதே சமூகத்திற்கு அளிப்பது பாடசாலையின் பாரிய பொறுப்பாகும். அதிபர், ஆசிரியர், மாணவர், ஊழியர் ஆகியோர் பாடசாலையின் அகச் சமூகமாகவும், பாடசாலைக்கு அயலிலுள்ள மக்கள், நிறுவனங்கள் என்பன புறச்சமூகமாகவும் கருதப்படுகின்றனர்.

பாடசாலை முகாமைத்துவம் என்பது மிகப்பரந்துபட்ட தொன்றாகும். மனிதவள முகாமைத்துவம், பௌதிகவள முகாமைத்துவம், நேர முகாமைத்துவம் ஆகியவற்றை இது உள்ளடக்குகின்றது. பாடசாலையைப் பயன்தரக்கூடிய விதத்தில் நிருவகிப்பது அப்பாடசாலை அதிபரின் பொறுப்பாகும். ஒரு பாடசாலையின் முதல் நிலை முகாமையாளர் அப்பாடசாலையின் அதிபரே ஆவார். ஒரு பாடசாலையின் முன்னேற்றம் அல்லது பின்னடைவு அப்பாடசாலையின் அதிபரது முகாமைத்துவ மற்றும் நிருவாகத்திறமை அல்லது திறமையீனம் என்பனவற்றிலேயே தங்கியிருக்கின்றது.

இதனால் தான் ''ஒரு பாடசாலையைப் பார்ப்பதற்கு பதிலாக அப்பாடசாலையின் அதிபரைப் பார்த்தால் போதும்'' என்பார்கள். ஒரே பிரதேசத்தில் அருகாமையிலுள்ள இரு பாடசாலைகளை ''சகோதரப் பாடசாலைகள்'' என அழைப்போம். இப்பாடசாலைகளின் சூழல், சமூகம், பாடசாலையின் பருமன், மாணவர் எண்ணிக்கை, ஆசிரியர் எண்ணிக்கை, பௌதிக வளங்கள் அனைத்தும் சமமாக இருப்பதாக கருதுவோம். ஆயினும் மாணவரது பண்பு விருத்திகளான பரீட்சை முடிவுகள், சாதனைகள், மனப்பாங்குகள் போன்றன வேறுபட்டிருப்பதை நாம் அவதானிக்கலாம். இதிலிருந்து அதிபரின் நேரடித் தாக்கத்தை நாம் புரிந்து கொள்ளமுடியும். மேலும் ஒரு பாடசாலையின் வரலாற்றை பின்நோக்கிப் பார்க்கும்போது வெவ்வேறு அதிபர்கள் கடமையாற்றிய காலங்களில் சாதனை மட்டங்கள் வேறுபட்டிருப்பதையும் அறியமுடியும். இச்சாதனைமட்டங்களில் அதிபரின் மனப்பாங்கு, அறிவு, ஆற்றல், நுண்மதி, ஆளுமை, அனுபவம் என்பனசெல்வாக்குச் செலுத்துவதாக பல ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. ஒரு பாடசாலையில் அதிபர் என்பவர் முகாமையாளர், நிருவாகி, தலைவர், ஆலோசகர், வழிகாட்டி போன்ற பன்முக வகிபாகத்தை ஏற்கவேண்டியவராகின்றார்.

சிறந்த பாடசாலை (Promising School)

எமது நாட்டில் இன்று சுமார் 11,000 பாடசாலைகள் உள்ளன. இப்பாடசாலைகளில் கட்டிடங்கள், அதிபர், ஆசிரியர், மாணவர்கள் அனைவரும் இருப்பார்கள். கல்வி அமைச்சின் சுற்று நிருபங்களுக்கு அமைவாக அனைத்துச் செயற்பாடுகளும் இப்பாடசாலைகளில் நடந்து கொண்டே இருக்கும். ஆயினும் மாணவரை அனுமதிப்பதற்காக பெற்றோர்கள் ஒரு சில பாடசாலைகளுக்கு மட்டுமே போட்டிபோடுகின்றனர். இதனால் கல்விச்சமூகம் ஒரு சில பாடசாலைகளை மட்டுமே சிறந்த பாடசாலைகளாக நோக்குகின்றது. ஒரு சிறந்த பாடசாலையின் பின்னணியில் சிறந்த அதிபரும் நல்லாசிரியர்களும் இருப்பார்கள். இலங்கைப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு Victoria Baker என்பவர் எழுதிய Blackboard in the Jungle எனும் நூலில் ஒரு சிறந்த பாடசாலைக்குரிய 12 பண்புகளை எடுத்துக்காட்டியுள்ளார். அவையாவன

1. பிள்ளைகளின் பாடசாலை வரவு உயர்ந்த மட்டத்தில் காணப்படும்.
2. இடைவிலகல் அபூர்வமாகவே நிகழும்.
3. பரீட்சை பெறுபேறுகள் மிக உயர்ந் மட்டத்தில் காணப்படும்.
4. ஆசிரியர்கள் லீவு பெறல் மிகக்குறைந்த அளவில் காணப்படும்.
5. பாடசாலையானது சமூகத்தோடு மிக நெருங்கியதொடர்பினைக் கொண்டிருக்கும்.
6. உயிர்ப்பான பாடசாலை அபிவிருத்திச் சங்கம் இருக்கும்.
7. அலுவலகம், வகுப்பறை, என்பன தூய்மையாகவும் ஒழுங்காகவும் இருக்கும்.
8. கட்டிடங்கள், பாடசாலைச் சூழல் என்பன கவர்ச்சிகரமாக பேணப்படும்.
9. ஒரு சிறந்த நூலகம் இருக்கும்.
10. கற்றலுக்கான உபகரணமும் ஆய்வு கூடமும் இருக்கும்.
11. இணைப்பாடவிதான செயற்பாடுகள் உயர்மட்டத்தில் நடைபெறும்.
12. ஆக்கபூர்வமான கற்பித்தலும் கற்றலும் இடம்பெறும்.

பாடசாலையின் விளைதிறன் அல்லது பயனுறுதி

ஒரு நிறுவனத்தின் முகாமைத்துவ செயற்பாட்டில் வினைத்திறன் (Efficiency), விளைதிறன் (Effectiveness) என்ற பதங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பாடசாலை என்ற நிறுவனத்திற்கும் இது பொருந்தும். விளைதிறன் என்பது குறிக்கோளுடனும் வினைத்திறன் என்பது வளங்களோடும் தொடர்புபடுகின்றன.

ஒரு நாட்டின் கல்வி இலக்கு (Goal) என்பது மாறாத்தன்மை கொண்டதாக இருப்பினும் இந்த இலக்கை அடைவதற்கான குறிக்கோள்கள் பாடசாலைக்கு பாடசாலை வேறுபட்டு அமையலாம். ஒரு பாடசாலை தன் குறிக்கோளை அடைந்து கொள்ள இயலும் பட்சத்தில் மட்டுமே அப்பாடசாலையானது ''விளைதிறன்'' உள்ள நிறுவனமாக விளங்குகின்றது எனக் கூறலாம். விளைதிறன் கொண்ட பாடசாலையின் பண்புகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- மாணவர்களின் திருப்திகரமான பங்களிப்பு
- இடைவிலகல் குறைவு
- மீளக்கற்போரின் எண்ணிக்கை குறைவு
- மாணவர் அதே பாடசாலையில் நீண்ட காலம் கற்கும் நிலை.

எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்களை அடைவதற்கு ஒரு பாடசாலை கொண்டுள்ள வளங்களை உச்சமாகப்பயன்படுத்துதல் ''வினைத்திறன் பண்பாகும்'' வினைத்திறன் உள்ள ஒரு பாடசாலையின் பண்புகளாக பின்வருவன எதிர்பார்க்கப்படுகின்றன.

- முன்மாதிரியான தலைமைத்துவம்.
- ஆசிரியர், மாணவர்களின் திறமைகள் பாராட்டப்படல்.
- ஆசிரியர், மாணவர், பெற்றோர்களின் கூடிய அர்ப்பணிப்பு.
- ஆசிரியர் குழாமின் உற்சாகமான செயற்பாடு.
- பாடசாலை உள்ளக ஆளிடைத் தொடர்பு.
- பாடசாலையில் உயர் வளங்கள் காணப்படல்.
- மாணவர்களின் திறமையும் எதிர்பார்ப்பும் உயர்மட்டத்தில் இருத்தல்.

பொதுவாக மாணவர்களின் சாதனை அல்லது வெற்றியே விளைதிறன் கொண்ட பாடசாலையின் தனித்துவமான பண்பாகக் கருதப்படுகின்றது. இதனையே பிரதானமாகக் கொண்டு ''விளைதிறன்'' கொண்ட பாடசாலையில் இருக்கவேண்டிய முக்கிய ஏழு பண்புகளென பின்வருவனவற்றை ஆய்வாளர் David J. Kirk (2004) முன்வைத்துள்ளார்.

1) தெளிவான பாடசாலை பணிக்கூற்று (Clear School Mission)

ஒரு நாட்டை எவ்விடத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்பது அந்நாட்டின் ‘‘பொதுவான தேசிய இலக்கு’’வாயிலாக தீர்மானிக்கப்படுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு அந்நாட்டின் தேசிய கொள்கைள், தேசிய கல்விக் கொள்கைகள் தயாரிக்கப்படுகின்றன. எமது நாட்டில் பொதுக்கல்வியின் பிரதான இலக்காக ‘‘தனியாளின் ஒன்றிணைக்கப்பட்ட அபிவிருத்தி’’ கருதப்படுகின்றது. இதற்கு உறுதுணையாக பாடசாலைகள் தமது சூழல், தேவை என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைக்கான மிகவும் பொருத்தமானதும் தெளிவானதுமான பணிக்கூற்றினை (Mission) வகுத்துக் கொள்ளவேண்டும். தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்ட ஒன்பது கல்வி இலக்குகளுக்கும் ஏற்ப இந்த பணிக்கூற்று அமைந்திருக்கவேண்டும். இது குறுகிய காலத்தில் நிறைவேற்றிக் கொள்ளக்கூடியதாகவும்,நிட்சயமானதாகவும் அளவிடக்கூடியதாகவும் அமைக்கப்படல் வேண்டும். அதிபர், ஆசிரியர்கள் இது தொடர்பாக தெளிவான விளக்கத்தோடு தமது ஒவ்வொரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும்.

Lezotte(1991)என்பவர் விளைதிறன் கொண்ட பாடசாலையின் பணிக்கூற்றானது ஆசிரியர்களின் பின்வரும் பண்புகளை வளர்ப்பதாக அமையவேண்டும் என கருதுகின்றார்.

- கற்பித்தல் நோக்கத்தை அடைவதற்கான தியாக உணர்வு.
- முன்னுரிமை அடிப்படையிலான செயற்பாடு.
- கணிப்பீட்டு செய்முறை
- வகை கூறும் பண்பு.

2) வெற்றிக்கான உயர் எதிர்பார்ப்புக்கள் (High Expectations for Success)

ஒரு விளைதிறன் கொண்ட பாடசாலையின் மாணவர்கள்‘‘அவசியமான கலைத்திட்டத்தின் உயர்மட்டத்தை அடைவதனை நோக்கமாகக் கொண்டு தொழிற்படவேண்டும்’’என பாடசாலைச் சமூகம் கருதுகின்றது. மேலும் இவ் உயர்மட்டத்தை மாணவர்களை அடையச் செய்யும் வழிமுறைகளில் ஆசிரியர்கள் நிபுணத்துவம் பெற்றிருப்பார்கள் எனவும் இச்சமூகம் மேலும் எதிர்பார்க்கின்றது.

பாடசாலை என்பது ‘‘வெற்றிக்கான ஒரு களமாகும்’’. மாணவரிடையே பல திறன்கள் மறைந்து போய் இருக்கும். பொருத்தமான வேளையில் இவற்றை ஆசிரியர்கள் இனங்கண்டு வெளிக்கொணரவேண்டும்.‘‘சந்தர்ப்பங்கள் கிடைக்கும்போது சாதனைகள் பிறக்கும்’’என்ற நெப்போலியன் கூற்று இதற்கு சிறந்த ஓர் உதாரணமாகும். அதிபர், ஆசிரியர்களின் உயர் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்பவே மாணவர்களின் சாதனைகளும் அமைந்திருக்கும்.

3) அறிவுறுத்தும் தலைமைத்துவம் (Instructional Leadership)

கல்வி முகாமைத்துவத்தின் பிரதான பணி விளைதிறன் மிக்க பாடசாலைகளை உருவாக்குவதாக இருக்கவேண்டும். இதற்கு விளைதிறன்மிக்க முகாமைத்துவம் அவசியமாகின்றது. பாடசாலையின் விளைதிறன்மிக்க முகாமைக்கு முதன்மைப் பொறுப்புள்ளவர் பாடசாலை அதிபரே ஆவார்.கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்காக அவர் பல்வேறு வகிபங்குகளை ஏற்கவேண்டியவராகின்றார். பிள்ளைகளின் கற்றல் மற்றும் ஆளுமை மேம்பாடு ஆகியவற்றுக்கு பாடசாலைத் தலைமைத்துவம் மிகவும் முக்கியமான காரணிகளில் ஒன்றாகும். அதிபரது தலைமைத்துவம் வெறுமனே அதிகாரம் சார்ந்ததாக இல்லாமல் தொழில்சார் நிபுணத்துவம், அறவொழுக்கம் சார்ந்ததாக மாறவேண்டும். “அதிபர் என்பவர் ஒரு தனிப்பட்ட தலைவர் அல்ல, அவர் தலைவர்களின் தலைவர்” என Lezotte (1991)கருதுகின்றார்.

பாடசாலையின் தூரநோக்கு (Vision) பணிக்கூற்று (Mission) என்பனவற்றை ஒன்றிணைப்பவராக பாடசாலை அதிபர் இருக்க வேண்டும். பாடசாலையின் பணிக்கூற்றினை மீண்டும் மீண்டும் ஆசிரியர்களுக்கு அறிவுறுத்துவதன் மூலம் அவர்களது மனப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்தமுடியும். இதனால் வகுப்பறை கற்பித்தலிலும் மாற்றம் ஏற்படக்கூடும்.

ஒரு பாடசாலையின் தலைமைத்துவம் வினைதிறன் மிக்கதாக இருப்பதற்கான “வலுவான மூலகங்கள்”(Critical elements) என பின்வருவனவற்றை Johnson (1997) குறிப்பிடுகின்றார்.

- விளைதிறன்மிக்க நிருவாக தலைமைத்துவம்.
- உடன்பாடான எதிர்பார்புக்கள்.
- உறுதியான ஒன்றிணைந்த கலைத்திட்டம்.
- பகிர்ந்தளிக்கப்பட்ட தீர்மானம் மேற்கொள்ளல்.
- கற்பித்தலிலும் அதன் வெற்றியிலும் விசாலமான வகை கூறல்.

4) கற்றலுக்கான வாய்ப்பும், மாணவர்கள் உரிய நேரத்தில் உரிய வேலையைச் செய்தலும். (Opportunity to learn and Student Time on Task)

மாணவர்கள் வாரநாட்களில் ஆறு மணித்தியாலங்களை பாடசாலைகளில் கழிக்கின்றனர். அவர்கள் பாடசாலைக்கு வருகைதரும்போது பல எதிர்பார்ப்புகளுடன் கற்றல் உபகரணங்களை சுமையாக தாங்கிய வண்ணம் வருகின்றனர். அவர்களின் எதிர்பார்ப்புக்களை ஆசிரியர்கள் நிறைவேற்ற வேண்டும். தமக்கு வழங்கப்பட்ட நேரசூசியின் பிரகாரம் முழுமையான நேரத்தை வகுப்பறையில் பயன்படுத்தவேண்டும். எதனை, எப்படி, எதனால், யாருக்கு? கற்பிப்பது என்பதில் சரியான திட்டம் ஆசிரியரிடம் இருத்தல் வேண்டும். வகுப்பறையில் இருக்கின்ற மீத்திறன் மாணவர்களையும், கற்றலில் இடர்படும் மாணவர்களையும், விசேடதேவையுள்ள மாணவர்களையும் திருப்தி செய்வதாக ஆசிரியரின் கற்பித்தல் அமைதல் வேண்டும். தமக்கு வழங்கப்பட்ட நேரத்தை முழுமையாக பயன்படுத்துவதோடு, கற்பித்தல், மதிப்பீடு, பின்னூட்டல் அனைத்திற்கும் போதுமான நேரத்தை ஒதுக்குதல் வேண்டும்.

உரிய காலத்திற்கான பாடத்திட்டத்தை அவ்வப்போது நிறைவு செய்தல்வேண்டும். மாணவருக்கு அல்லது பாடத்திற்கு பொருத்தமற்ற விடயங்களை கதைத்து மாணவர்களின் பெறுமதிமிக்க நேரத்தை செலவு செய்வதனை ஆசிரியர்கள் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

1992 இல் வெளியிடப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கையில் ''வகுப்பறை தொடர்பாக''அவதானிக்கப்பட்ட விடயங்களை இங்கு முன்வைப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

- வகுப்பறைத் தொழிற்பாடு மிகவும் ஒரே பாங்காய் ஒரே தொனியில் அமைந்திருந்தது.
- வகுப்பறைகளில் ''சோம்பல் கதை அமர்வுகளே'' அதிகமாக இருந்தன. கரும்பலகையும் குறைவாகவே பயன்படுத்தப்பட்டது.
- ஆசிரியர் முற்று முழுக்கப் பள்ளி மாணவர்களின் பாடப்புத்தகத்தையே நம்பியிருந்தனர்.
- மாணவரை கற்றலில் ஈடுபடுத்துவதற்கான அற்ப சான்றுகளே கிடைத்தன.

5) பாதுகாப்பானதும் ஒழுங்கமைக்கப்பட்ட சூழலும் (A safe and orderly environment)

பாடசாலை சூழலானது மாணவர்களில் உடல், உளம் சார்ந்த பாதுகாப்பை வழங்கக்கூடியதாகவும், நேர்த்தியான முறையில் ஒழுங்கமைக்கப்பட்டதாகவும் இருக்கவேண்டும். பலதரப்பட்ட உளத்தாக்கத்துடன் வீட்டில் இருந்து பாடசாலைக்கு வருகின்ற மாணவர்களின் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்தக்கூடிய வண்ணம் பாடசாலை அழகுபடுத்தப்பட்ட ''வியாபார நிலையம் போல்'' காட்சியளிக்கவேண்டும். வகுப்பறையில் கூட மாணவர்கள் பாடம் தொடர்பாகவோ அல்லது ஆசிரியர் தொடர்பாகவோ பயஉணர்வுடன் இருக்கக்கூடாது. விருப்புடன் உரிய பாட ஆசிரியரை எதிர்பார்த்து காத்திருக்கவேண்டும். பாடசாலையில் ஒவ்வொரு செயற்பாடுகளும் நன்கு திட்டமிடப்பட்டு செவ்வனே நடைபெறுதல் வேண்டும். பாடசாலையை விட்டு வீடு செல்லும் மாணவர்கள் மனநிறைவுடன் மீண்டும் நாளை வரவேண்டும் என்ற ஆவலுடன் செல்லவேண்டும். இதனை பாட ஆசிரியர்கள்தான் ஏற்படுத்த வேண்டும். இதன்மூலம் பாடசாலையில்''இடைவிலகல்'' குறைக்கப்படுவதற்கான வாய்ப்பு ஏற்படுகின்றது.

6) உடன்பாடான வீடு – பாடசாலை உறவு (Positive Home – School Relations)

பாடசாலை மட்டத்தில் பெற்றாரையும், சமூகத்தையும் ஈடுபடுத்துவதன் மூலம் திறந்த தன்மையை மேம்படுத்துவதோடு பாடசாலையில் எதிர்பார்க்கப்படும் விளைதிறனையும் அடையமுடியும். பாடசாலை ஆளணி, பெற்றார் மற்றும் மாணவர்கள் ஆகிய முத்தரப்பையும் ஒன்றிணைப்பதன் மூலம் மாணவர்களின் கற்றலை மேம்படுத்த முடியும் என அண்மைக்கால ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

பாடசாலையின் பணிக்கூற்றினை நோக்கிய செயற்பாட்டில் பெற்றாரை ஈடுபடுத்தவேண்டியது விளைதிறன் மிக்க அதிபரின் பொறுப்பாகும். ''விளைதிறன்மிக்க பாடசாலையானது மாணவர்களுக்கு மட்டுமல்ல முழுக் குடும்பத்திற்குமே கற்பிப்பதாக''Goodman (1997)கருதுகின்றார். பெற்றார்களுக்கான உரிய திட்டங்களை முறையாக அமைத்துக் கொடுக்கும்போது அவர்கள் பிற்பகல்களிலும், வார இறுதிநாட்களிலும் பாடசாலையில் பங்குதாரர்களாக தொழிற்படமுடியும். இதன் மூலம், பெற்றாரின் அக்கறை,ஈடுபாடு என்பனவற்றை காண்கின்ற மாணவர்களும் கற்றலின் பால் ஈர்க்கப்பட வாய்ப்பு அதிகமாகவுள்ளது.

மாணவர்களின் கல்வியில் ''கௌரவமான பங்குதாரர்களாக'' பெற்றோர்கள் இருக்கின்றார்கள் என்பதனை விளைதிறன்மிக்க பாடசாலைகள் கருதவேண்டும் என Johnson (1997) குறிப்பிடுகின்றார்.

பெற்றார், பாடசாலை பழைய மாணவர், சமூகத்தலைவர்கள் முதலானோருடன் கூடிய பிணைப்புகளை உருவாக்கி பாடசாலை முகாமைக்கு கூடிய வலுவூட்டலை ஏற்படுத்துவதனை நோக்கமாகக்கொண்டே''பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்''(PSI) அண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

7) மாணவர் முன்னேற்றத்தை அடிக்கடி கண்காணித்தல்

(Frequent Monitoring of Student Progress)

எந்தவொரு நிறுவனத்தின் வெற்றிக்கும் கண்காணிப்பு, மேற்பார்வை என்பன முக்கியமானதாகும். சாதனை செய்கின்ற பாடசாலைகளை எடுத்து ஆராய்ந்து பார்க்கும்போது அங்கு கூடுதலான கண்காணிப்புக்கள் இருக்கும். குறிப்பாக பரீட்சைகள், மதிப்பீடுகள், கணிப்பீடுகள்எந்தளவுக்கு அதிகமாக நடைபெறுகின்றதோ அந்தளவிற்கு சாதனை மட்ட உயர்வும் காணப்படும். உள்ளக, வெளி கண்காணிப்புக்கள் விளைதிறன் மிக்க பாடசாலையின் இருதூண்களாகும். கண்காணிப்பு மூலம் மாணவரது நடத்தை, செயற்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தமுடியும். ஆசிரியர், அதிபரின் செயற்பாடுகளுக்கும் கூடுதலான கண்காணிப்பு உரம் ஊட்டக்கூடியது.

முடிவுரை :

பாடசாலை தொடர்பாக எதிரான மனப்பாங்குகளே கல்விச் சமூகத்தினால் அடிக்கடி முன்வைக்கப்படுகின்றன. மாணவர்களின் சிந்தனைத்தூண்டலுக்கும் புத்தாக்க செயற்பாட்டிற்கும் வாய்ப்புக்கள் வழங்கப்படாமல் ''அறிக்கைகள் தயாரித்தல்''பணியை முழுமையாகவும் ஆர்வமாகவும் நடைமுறைப்படுத்தும் பாடசாலைகளே அதிகமாக உள்ளதாக பரவலாக பேசப்படுகின்றது. இத்தகைய பாடசாலைகளில் மாணவர் விருத்தி, சாதனை மட்டம் என்பன மிகவும் குறைவாகவே காணப்படும். இதற்கு முழுபொறுப்பானவராக பாடசாலை அதிபரேகாணப்படுவார். இத்தகைய பாடசாலைகள் ஒவ்வொன்றையும்''விளைதிறன்மிக்க பாடசாலை''ஆக மாற்ற முயலவேண்டும்.

இதனைப்பற்றி சிந்தித்து, அர்ப்பணிப்புடன் ஈடுபடும்போது இது இலகுவாக அடையப்பட்டுவிடும். விளைதிறன்மிக்க பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்களும் விளைதிறன்மிக்கவர்களே. இதன் மூலம் பாடசாலைச் சமூகத்திற்கு மட்டுமல்ல முழு நாட்டிற்குமே விளைதிறன் மிக்க மாணவர்கள் உருவாகி விடுவார்கள்.